National Healthcare Group
Adding years of healthy life

நோயாளிகள்மற்றும் குடும்பத்தினருக்கான வழிகாட்டி

# கருப்பை கருத்தடை சாதனம் (IUCD)

வகை: Multi-safe CU375/375



# கருப்பை கருத்தடை சாதனம் என்றால் என்ன?

கருப்பை கருத்தடை சாதனம் (IUCD) என்பது ஒரு சிறிய பிளாஸ்டிக் சாதனம். அதன் முனையில் ஒரு நூல் இணைக்கப்பட்டிருக்கும். இது கர்ப்பத்தைத் தடுக்க கருப்பையின் உள்ளே வைக்கப்படுகிறது மற்றும் 5 ஆண்டுகளுக்கு. செயல்திறன் கொண்டது.



நீங்கள் குழந்தை பெற முடிவு செய்யும்போது IUCD-ஐ அகற்றலாம்.

# IUCD செலுத்துதல்

உங்கள் மாதவிடாய் காலத்தில் IUCD-ஐ செலுத்துவது சிறந்தது. ஏனெனில் இந்த நேரத்தில் உங்கள் கருப்பை வாய் பெரிதாகவும் மென்மையாகவும் இருப்பதால் செலுத்துவது எளிதாக இருக்கும்.

செயல்முறையின் போது, மருத்துவர் உங்கள் கருப்பையின் அளவு, வடிவம் மற்றும் நிலையை அளவிட யோனி பரிசோதனை செய்வார். ஒரு சவுண்ட் மூலம் கருப்பையின் ஆழத்தை கண்டறிவார். IUCD செலுத்துவதற்கு முன் செலுத்தும் கருவியின் பிடியை சரிசெய்ய இது மருத்துவருக்கு உதவும். பின்னர் செலுத்தும் கருவியைப் பயன்படுத்தி IUCD செலுத்தப்படும்.

நீங்கள் சிறிது அசௌகரியத்தை உணரலாம், ஆனால் அது தாங்கக்கூடியதாக இருக்கும்.

# சாத்தியமான அபாயங்கள் மற்றும் பின்விளைவுகள் என்ன?



- செலுத்திய பிறகு முதல் மூன்று மாதவிடாய் சுழற்சிகள் பொதுவாக உங்களின் வழக்கமான மாதவிடாய் சுழற்சிகளில் இருந்து வித்தியாசமாக இருக்கும்

- மாதவிடாய் அதிகமாக இருக்கலாம், வலி மற்றும் சிறிய அளவு இரத்தப்போக்கு மாதவிடாய்க்கு முன்பும் பின்பும் ஏற்படலாம்

- மாதவிடாய் காலத்தில் IUCD வெளியேறும் சிறிய வாய்ப்பு உள்ளது

- உங்கள் IUCD உள்ளாடையில், பேடில், அல்லது கழிவறையில் தெரிந்தால், மருத்துவரை பார்ப்பதற்கு ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யவும்

- ஆணுறைகளைப் போலல்லாமல், IUCD பாலியல் நோய்களில் இருந்து உங்களைப் பாதுகாக்காது. தொற்று பரவுவதைத் தடுக்க ஆணுறையைப் பயன்படுத்தலாம்.

- மிக அரிதாக, IUCD செலுத்தும்போது கருப்பைக்கு காயம் ஏற்படலாம்

## IUCD சரியான இடத்தில் உள்ளது என்பதை நான் எப்படி அறிவது?

- ஒவ்வொரு மாதவிடாய்க்குப் பிறகும், சுத்தமான விரலை யோனியில் செலுத்தி நூலை சரிபார்க்க வேண்டும்

- நீங்கள் நூலை இழுக்கக்கூடாது, ஏனெனில் இது சாதனத்தை இடமாற்றம் செய்யக்கூடும்

## நான் எப்போது மருத்துவ உதவியை நாட வேண்டும்?



- மாதவிடாய் தாமதமாதல் அல்லது இல்லாமல் இருத்தல்
- கடுமையான வயிற்று வலி மற்றும் இறுக்கம்
- கடுமையான அல்லது நீண்ட கால சிறிய இரத்தப்போக்கு
- யோனி வழி துர்நாற்றம் வீசும் வெளியேற்றம்
- காய்ச்சல்
- நூல் காணப்படவில்லை

## எனது அடுத்த IUCD மாற்றம் எப்போது?

- உங்கள் IUCD செலுத்தப்பட்ட தேதி ________________
- அடுத்த IUCD மாற்றம் 5 ஆண்டுகளில் செய்யப்பட வேண்டும்

## எனது அடுத்த பரிசோதனை எப்போது?

- மருத்துவர் உங்களை 6 வாரங்கள் மற்றும் 6 மாதங்களில் பரிசோதிப்பார்
- உங்கள் அடுத்த சந்திப்பு தேதி ________________

National Healthcare Group
Adding years of healthy life

Copyright © 2025 National Healthcare Group

NHG cares it's in your hands

NHG-NUR-BRO-2024-00077-TV1